I Additional District Court, Thoothukudi.

O.S.No.197/2022 நாள் : 29.06.2026

வா.சா.1– திருமதி. இந்திராணி

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–**

என் பிறந்த தேதி 05.05.1952. 7 ம் பிரதிவாதி என் அக்கா. 3 ம் தபசில் சொத்து காம்பவுண்ட் உள்ள வீடு. அந்த இடத்தின் மொத்த விஸ்தீரணம் 30 செண்ட் என்றால் சரிதான். அதில் 19.72 செண்ட்டில் காம்பவுண்ட்டுடன் உள்ள பகுதியில் என் அண்ணன் ராமச்சந்திரன் வீடு கட்டியிருக்கிறார் என்றும், மீதமுள்ள சொத்து காலியாக உள்ளது என்றும் சொன்னால் சரிதான். மீதமுள்ள 10.28 செண்ட்டில் 5.41 செண்ட் குறித்து மேற்படி ராமச்சந்திரன் எனக்கு தானமாக எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த தான பத்திரத்தின் பதிவு நகல் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ 1**. இந்த பத்திரம் பற்றி வழக்குரையில் சொல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் 2017 ம் ஆண்டு என் அண்ணன் ராமச்சந்திரன் எனக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் நகல் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ 2**. பி.சா.ஆ 1, 2 சொத்துக்களை நான் இந்த வழக்கில் காட்டவில்லை. சொத்துக்களில் என் அண்ணனுக்கு உரிமை இருந்தால்தான் மேற்படி பத்திரங்களை என் அண்ணன் எழுதிக் கொடுக்க முடியும் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் என் அண்ணனுக்கு என் தகப்பனார் மூலமாகத்தான் வந்தது. தாவா 4 ம் தபசில் சொத்தை பொறுத்து என் அண்ணன் என் சகோதரி ஜெயா முருகவேலுக்கு ஒரு உயில் மூலமாக எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 5 ம் தபசில் சொத்தைப் பொறுத்து என் அண்ணன் 7 ம் பிரதிவாதியின் மகனுக்கு ஒரு உயில் எழுதி வைத்துவிட்டார் என்றால் சரியல்ல. வழக்குரையில் காட்டப்பட்டுள்ள 200 பவுன் நகை யாரிடம் உள்ளது என்று

சொல்லவில்லை. கரூர் வைசியா வங்கியிலிருந்த பணத்தை என் அண்ணன் ஜெயா முருகவேலுக்கு 26.02.2009 ல் உயில் மூலமாக எழுதிக் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தற்போது என் உடன் பிறந்த சகோதரர்களிடம் ஒவ்வொரு சொத்து உள்ளது என்றால் இந்த கேள்வி பலமுறை கேட்டும் சாட்சி பதில் அளிக்கவில்லை. தாவா சொத்து எதுவும் என் தகப்பனாரின் பூர்வீக சொத்துக்கள் அல்ல என்றும், என் தகப்பனாரின் சுயார்ஜித சொத்துக்கள் என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் உயிருடன் இருக்கும்போதே அவரது மகன் ராமச்சந்திரனுக்கு உயில் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உயில் சொத்து போக ராமசந்திரனின் மற்ற சொத்துக்கள் ராமசந்திரன் சுயமாக சம்பாதித்த சொத்துக்கள் என்றும் அந்த சொத்துக்கள் குறித்து ராமசந்திரன் தன் உடன் பிறந்தவர்களுக்கு உயில் மூலமாக எழுதிக் கொடுத்துவிட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குரையில் 7 வது தபசிலில் கண்டுள்ள நகைகள் எதுவும் குடும்பத்திற்கு இல்லை என்றால் சரியல்ல. 7 ம் பிரதிவாதி திருமணம் ஆகி சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் விளாத்திகுளத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என் அண்ணன் 2022 ல் கொரோனாவால் இறந்துவிட்டார் என்றால் சரிதான். என் அண்ணன் ஏற்கனவே எனக்கு சில சொத்துக்களை கொடுத்துவிட்டதால் மீதமுள்ள அவரது சொத்துக்களில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பி.சா.ஆ 1, 2 சொத்துக்களை இந்த வழக்கில் சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.